# மற்றமைச் சிந்தனையில் எக்ஸிஸ்டென்சியலிசமும் ஃபேன்சி பனியனும்

**ம. உமாதேவி**
*உதவிப்பேராசிரியர்*
*கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*ஈரோடு*

எழுத்தாளர் சாருநிவேதிதா அவர்களின் முதல் புதினம் 'எக்ஸிஸ்டென்சியலிசமும் ஃபேன்சி பனியனும்'. எக்ஸிஸ்டென்சியலிசம் அதாவது இருத்தலியல் என்பது நவீனத்துவத்தின் இறுதி மற்றும் பின்நவீனத்துவத்தின் தொடக்க காலகட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோட்பாடாகும். இப்புதினத்தில் மனிதனின் செயல்பாடுகள், பாலியல்சார் கருத்துக்கள், மொழி, உணவு போன்றவை சார்ந்த தவிர்க்கப்பட்ட எதார்த்தங்கள் முன்வைக்கப்படுகின்றன.

### இருத்தலியல் கோட்பாடு

உயர்திணையான மனிதனின் இருத்தல் வேறு, அஃறிணைகளான தாவரங்கள், பிராணிகளின் இருத்தல் வேறு என்று ஸார்த்தர் வகைப்படுத்துகிறார். அதாவது பிராணிகள், தாவரங்கள் போன்றவற்றின் இருத்தல் என்பது அதற்குள் இருக்கிறது (It's self). அவற்றின் வளர்ச்சி மற்றும் புதுப்பித்துக்கொள்ளும் பண்புகளே அதன் இருத்தலை நமக்குக் காட்டுகிறது. மனிதனின் இருத்தல் என்பது அவனது சிந்தனைக்கானதாக இருக்கின்றது (For it's self). அவனது சிந்தனை மூலம் தனது இருத்தலை அவனுக்குப் பின்னும் நம்மை உணரச்செய்கிறான்.

ஜீன்பால் சார்த்தர், சோரன் கீர்க்கேகார்ட், ஆல்பர்கெமூ, சாமுவேல் பெக்கட், மார்ட்டின் ஹைடெக்கர், பிரெடெரிக் நீட்சே முதலியோர் இருத்தலியல் சிந்தனையை முன்வைத்தனர்.

ஸார்த்தர், 'பிரஞ்ஞை – பிரபஞ்சம்' என்ற கருத்தை முன்வைத்தார். நான் என்பது பிரஞ்ஞை, பிரபஞ்சம் என்பது என்னைச் சுற்றி இருக்கும் வெளி. எனக்கும் என்னைச் சுற்றி இருக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே இந்த மொழிதான் இடையூறாக இருக்கிறது என்றார் ஸார்த்தர்.

பின்நவீனத்துவவாதிகளின் மொழி வேறு, பிரஞ்ஞை என்பது வேறு இல்லை. நமது பிரஞ்ஞை என்பதே மொழியால் கட்டமைக்கப்பட்டதுதான் என்று அறிவித்தபோது ஸார்த்தாரின் இருத்தலியல்வாதம் நிலைகுலைந்து போனது.

### பின்நவீனத்துவம்

'தொன்மையிலிருந்து மரபு தன்னை வார்த்துக்கொண்டது. மரபிலிருந்து நவீனத்துவம் தன்னை விடுவித்துக்கொண்டது. அதேபால் நவீனத்துவத்தில் இருந்து பின்நவீனத்துவம் தன்னைத் துண்டித்துக் கொண்டிருக்கிறது' என்று எம். ஜி.சுரேஷ் [1] குறிப்பிடுகிறார்.

பின்நவீனத்துவம் புறக்கணிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சிந்தனைகளையும், பிரதானப்படுத்தப்பட்ட, அங்கீகரிகப்பட்ட சிந்தனைகளையும் சமன் செய்யும் முயற்சியில் ஈடுபட்டது. மையங்களுக்கும் விளிம்புநிலைகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை சரிசெய்ய வேணடும். மையமும் விளிம்பும் அற்ற ஒரு சமநிலையை உருவாக்க வேண்டும் என்பதே இதன் குறிக்கோள்களுள் ஒன்றாக இருந்தது.

### மற்றமை என்பது

விளிம்புநிலை என்று புறக்கணிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாத, வெளியே சொல்லப்பட மாட்டாத சிந்தனைகளே மற்றமைகள். அதாவது அதர்ஸ் (Others) என்று குறிப்பிடப்படுபவைகள் ஆகும்.

சுயம் என்பது உண்மையில் நமக்குள் ஏற்கனவே இருக்கும் விஷயம் அல்ல, அது மற்றமைகளால் கட்டமைக்கப்படுவது என்கிறார் லக்கான்.[2] அது உண்மையே. ஒரு மனிதன் நிலையான குணம் கொண்டவன் என்று கூறிவிட முடியாது. சூழல், மனநிலைகளுக்கு ஏற்ப அவனது

செயல்பாடு இருக்கும். அவன் எவ்வெவற்றைப் புறக்கணிக்கிறான் என்பதைக் கொண்டே அவனது சுய தன்மையை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

லக்கானின் கோட்பாடும் இதுவே ஆகும். 'மற்றமைதான் சுயத்தைக் கட்டமைக்கிறது'[3] என்று அவர் கூறுகிறார். இதனை அடுத்து பூக்கோ இதுவரை எழுதப்பட்ட வரலாற்றை 'வன்முறைகளின் தொகுப்பு என்று பார்க்கிறார். இது மற்றமை ஒடுக்கப்பட்ட வரலாறு, எனவே ஒரு புதிய வரலாற்றை மீண்டும் எழுத வேண்டும் என்கிறார். ஏனெனில் வரலாறுகளில் அடிமைகளின் நிலையையோ அல்லது அவர்களின் விருப்பு வெறுப்புகளைப் பற்றியோ பெருவாரியாகக் குறிப்பிடவில்லை.

**மற்றமைச் சிந்தனைகளுக்கு உதாரணம்**

மற்றமைச் சிந்தனைகளுக்கு எடுத்துக்காட்டாக ஒருபால் விருப்புடையவர்கள், பாலியல்சார் பெண்கள், மனப்பிறழ்வுடைய குற்றவாளிகள், வெள்ளையரல்லாதவர்கள், சிறைக்கைதிகள் போன்றவர்களை 'மற்றவர்கள்' (அதர்) என்பதற்கு நிலையான எடுத்துக்காட்டாக பூக்கோ எடுத்துக்கொள்கிறார்.[4]

'எக்ஸிஸ்டென்சியலிசமும் ஃபேன்சி பனியனும்' என்ற புதினத்தில்

- பாலியல்சார் மற்றமை
- மொழிசார் மற்றமை
- உணவுசார் மற்றமை
- செயல்பாடுசார் மற்றமை
- தூய்மைசார் மற்றமை

என்று பல்வேறு இடங்களில் மற்றமை சிந்தனைகளை கையாண்டுள்ளார். இம்மற்றமைச் சிந்தனைகள் அனைத்தும் சுயத்தை வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றன.

**பாலியல்சார் மற்றமை**

பாலியல் வேட்கையின் காரணமாக ஏற்படும் உடல் மற்றும் மனதில் ஏற்படும் மாற்றங்களே செயல்பாடுகளாக உருமாறுகின்றன.

- சுயமைதுனம் செய்தல் - பாலியல் வேட்கையின் காரணமாக தன்னைத் தானே திருப்திப்படுத்திக் கொள்ளும் முயற்சி. இது ஆண், பெண் இருவருக்கும் பொதுவான நிகழ்வு. இச்செயல் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் செயல், மற்றும் இழிவான ஒதுக்கப்பட்ட செயலாக கருதப்படுகின்றது.
- திருமணம் ஆன பின் வேறு ஒருவருடன் ஓடிப்போதல் - இச்செயல் பாலியல் ரீதியான தேவையைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் செயல். இது ஆண், பெண் இருவருக்கும் பொதுவான செயல். பாலியல் வேட்கை மற்றும் திருப்தியின்மை காரணமாக நடைபெறும் செயல். குடும்பம் என்னும் கட்டமைப்பைச் சிதைக்கும் அளவிற்கு மனத்தூண்டலை ஏற்படுத்தும் செயல்.
- வயது முதிர்ந்த பெண் சிறு வயது பையனுடன் ஓடிப்போதல் - வயதுவேறுபாடு அற்ற பாலியல். கீழ்மையான செயல்பாடு என்று ஒதுக்கப்படுகின்றது. இதுவும் பாலியல் வேட்கையின் காரணமாக நிகழ்வதே. 'கைக்கிளை' என்று தொல்காப்பியத்தில் சுட்டப்படும் உறவு ஆகும்.
- கணவன் பிரிவால் முறைகேடான உறவு - சூழல் காரணமாக தனது பாலியல் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சி.
- சமூகக் கட்டமைப்பில் பாலியல்சார் உறவுகளுக்கு என்று தடைசெய்யப்பட்ட உறவுகளான
    1. அம்மா – அண்ணன்
    2. அண்ணன் - தங்கை
    3. அப்பா – மகள்

'எலக்ட்ரா தியரி', 'இடிப்பஸ் தியரி' என்று இதனைக் கூறுவர். இப்புதினத்தில் எலக்ரா தியரி பயன்படுத்தப்பட்டுள்ளது. தந்தை – மகள் உறவுக்கு இடையே இளையோடும் மெல்லிய ஈர்ப்பு இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொருமுறை இனவிருத்தி உறவில் ஈடுபடும் போதும் மனித உடலில் ஆண்களுக்கு குறிப்பிட்ட அளவு சக்தி விரையம் ஆகின்றது. 'யோகிமார்களின் குண்டலினி சக்தி பற்றிய ஆராய்ச்சி நூல்களை நூலகத்தில் தேடியெடுத்துப் பார்த்தபோது எழுபது துளிகள் என்பது உறுதியாயிற்று' என்று சாருநிவேதிதா குறிப்பிடுகின்றார். எழுபது துளிகள் என்பது வெளிப்படும் உயிர்திரவத்தின் அளவு ஆகும். இவ்விரையம் காரணமாகவே உடல் மற்றும் மனச்சோர்வு ஏற்படுகின்றது. ஆரோக்கியமான ஆண் - பெண் உறவில் இவ்விரயம் ஆற்றலாக மாறுகின்றது. அடிக்கடி ஏற்படும் பாலியல் வேட்கை அதானால் நிகழும் முறைகேடான உறவு இவையே ஒதுக்கபப்ட்ட செயல்பாடுகளாக இங்கு முன்வைக்கப்படுகின்றன.

இந்த ஒதுக்கப்பட்ட பாலியல்சார் நிகழ்வுகளின் மூலமே மனிதர்களுக்கு இடையிலான அங்கீகரிக்கப்பட்ட பாலியல் குறித்த விழிப்புணர்வு மற்றும் அவசியம் குறித்து உணரமுடிகின்றது. மக்களிடையே பாலியல்சார் விழிப்புணர்வுக் கல்வி அவசியமாதலை அறியமுடிகின்றது.

**மொழிசார் மற்றமை**

ஒருவரின் தனிப்பட்ட விசித்திரமான செயல்களின் காரணமாக பட்டப்பெயர்கள் உருவாகின்றன. அச்செயலானது நடை, உடை, பேச்சு, அவர்களிடம் உள்ள குறைபாடுகள் என்று ஏதேனும் ஒன்றை மையகக் கொண்டதாக இருக்கும். இந்நாவலில் இடம்பெறும் பட்டப்பெயர்கள் 'அண்டங்காக்கா, காண்டுமாமா, மசக்கை, டோங்கா, பீநாத்தம், குசுக்குடிச்சான், சூத்தாட்டி என்பன.

ஒருவரைக் கடுமையாகத் திட்டுவதற்கும் பாலியல்சார் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. 'எதிர்த்துக் கேட்டால் கிடைக்கும் வசைச்சொற்களைத் தெருப்பெண்களால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. அடிக்கடி அந்தப் பெண்களுக்குள்ளாகவே சண்டை மூண்டு ஆண்பெண் இனச்சேர்க்கை தொடர்பான வார்த்தைகளால் தெருவே நிறைந்தது' என்று சாருநிவேதிதா குறிப்பிடுகின்றார். பெண்களின் இயல்பான செயல்களோடு பாலியல் செயல்பாட்டு தொடர்புபடுத்தித் திட்டும் சூழலும் உண்டு. இது அவர்களை மற்றவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தும் முயற்சிக்கான வடிகால் ஆகும்.

1. குப்புறப்படுத்தல் - எவளை நினைத்துக் குப்புறப்படுக்கிறார் என்று சாடுதல்
2. மல்லாக்கப்படுத்தல் - உனக்கு அதற்கு இன்னும் வயது வரவில்லை என்று ஏசுதல்.

சமுதாயத்தில் பாலியல் சார்ந்து இழிவுபடுத்துகின்ற சொற்களே மனதைப்பெரிதும் காயப்படுத்தும், அவமானத்திற்கு உள்ளாக்கும் சொற்களாகக் கருதப்படுகின்றன. அவை மொழிசார்ந்து ஒதுக்கப்பட்ட சொற்களாகக் கையாளப்படுகின்றன.

**உணவுசார் மற்றமை**

ஒருசில உணவுவகைகள் அவற்றின் செய்முறை மற்றும் உடலுக்குக் கேடு விளைவிக்கும் தன்மை காரணமாக அவை ஒதுக்கப்பட்ட உணவுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. பம்பாய் மிட்டாய், ஜவ்வு மிட்டாய், ஐஸ் போன்றவை உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவுப்பொருள்கள் ஆகும். இவை சுகாதாரம் அற்றமுறையில் கையாளப்படுவதால் நோய்க்கிருமிகள் பரவ வாய்ப்பு உண்டு.

1. பம்பாய் மிட்டாய் - மீன் செதில் கொண்டு தயாரிக்கப்படுவது
2. ஜவ்வு மிட்டாய் - எச்சில் தொட்டு தயாரிக்கப்படுவது
3. ஐஸ் - சுகாராதமற்ற நீர் மற்றும் ஐஸ் கட்டி கொண்டு தயாரிக்கப்படுவது

**செயல்பாடுசார் மற்றமை**

மனிதனின் ஒருசில செயல்பாடுகள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டதாக அல்லது அதிகம் பேசப்படாததாக அல்லது மர்மமானதாகக் கருதப்படுகின்றன.

- தாய்மொழியை விட்டுவிட்டு அந்நியமொழியில் கடிதம் எழுதுதல் ஒதுக்கப்பட்ட செயல். இச்செயல் அடிமை மனோபாவத்தில் இருந்து இன்னும் மனிதன் வெளிவராமையையே சுட்டுகிறது என்கிறார் சாருநிவேதிதா.
- செய்வினை செய்தல் போன்ற மூடநம்பிக்கைகளை மக்கள் இன்னும் நம்பிவாழ்வது. அதாவது குண்டூசி, குத்தூசி, கண்ணாடித்துண்டுகள், ஆணி போன்ற பொருள் ஒன்றை வைத்து பூஜை செய்து முடிக்கும்போது அந்தப் பொருள் எதிரியின் வயிற்றினுள் இறங்கியிருக்கும். ஆனால் இரத்தம் வராது. இத்தகையே செயலே செய்வினை ஆகும். ஆனால் உண்மையில் அவ்வாறு

எதுவும் நடந்திருக்காது. அதுபோன்ற ஓர் உணர்வை மனரீதியாக ஏற்படுத்தி அதை மனிதனை நம்பச்செய்து அதன் மூலம் இலாபம் ஈட்டுகின்ற செயல்.

- பேய், பிசாசுகள் மற்றும் கடவுள் குறித்த நம்பிக்கை. மனஅழுத்தம் மற்றும் தனித்த கவன ஈர்ப்பில் ஆர்வம் காரணமாகவே ஒருவரின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுகின்றன. அந்நடவடிக்கைளே பேய், பிசாசு மற்றும் கடவுள் போன்றவற்றின் செயல்பாடுகளாக மனிதர்களால் உருமாற்றப்படுகின்றன.
  (எ.கா) ஆர்த்திக்கும் சந்திரசேகருக்குமான காதல் உள்ளத்தில் இருந்ததன் விளைவே அவள் பேய் பிடித்தது போன்று செயல்பட்டதன் காரணம். (எக்ஸிஸ்: ப : 129)
- வறுமையின் காரணமாகவோ அல்லது வேறு சூழல் காரணமாகவோ பிச்சையெடுத்தல். 'திருடு ஆனால் பிச்சையெடுக்காதே' என்ற கருத்தை முன்வைக்கிறார் ஆசிரியர். உழைக்காமல் பிச்சையெடுப்பதைவிட, திருடுவதில் உழைப்பு உண்டு. அதன் மூலம் கூட உயிர்வாழலாம் ஆனால் பிச்சையெடுப்பது என்பது சோம்பேறித்தனம் என்கின்றார்.

இச்செயல்பாடுகளே சமூகத்தில் உள்ள விளிம்புநிலைகளை நம்மை உணரவைக்கின்றன. விளிம்புநிலைகளிலேயே சமூகத்தின் எதார்த்தநிலைய நம்மால் அறியமுடிகிறது. மேற்கண்டவை சமூகத்தின் உண்மைநிலையைக் கட்டமைப்பதாக உள்ளன.

**தூய்மைசார் மற்றமை**

தனிநபர் உடல்தூய்மை மற்றும் பொதுஇடங்களில் செய்யக்கூடாத, முகச்சுழிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது இதுவரை பதிவுசெய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்ட செயல்பாடுகளை இப்புதினம் முன்வைக்கின்றது.

- பொது இடங்களில் மற்றவர்களின் கவனத்திற்கு உள்ளாகும் வண்ணம் மூக்கு நோண்டுதல்.
- விரல் நகங்களில் உள்ள அழுக்குகளைச் சரிவர சுத்தம் செய்யாமல் இருத்தல்.
- பாதங்களை அன்றாடம் தூய்மைப்படுத்திப் பராமரிக்காமல் வெடிப்புகளை வளரவிடுதல்.'.
- தினமும் முகச்சவரம் செய்யாமல் இரண்டு, மூன்று நாள்கள் விட்டு பின்பு முகச்சவரம் செய்தல்.
- உணவு உண்ணும்பொழுது மணிக்கட்டில் வழியவிட்டுக்கொண்டு உணவு உண்ணுதல்.
- சுகாதாரம் இல்லாமல் கண்ட இடங்களில் எச்சில் துப்புதல்.
- மற்றவர்களின் கவனத்தைச் சிதைக்கும் வண்ணம் சத்தம் போட்டுக் கொட்டாவி விடுதல்.

போன்ற செயல்பாடுகள் பார்ப்பவர் மனதில் அருவெருப்பான பதிவை ஏற்படுத்துகின்ற செயல்பாடுகள் ஆகும். ஆனால் மனிதனின் பழக்கவழக்கங்கள் அவன் வாழும் சூழல் மற்றும் அவனது தேவைகளை முன்னிறுத்தியே ஏற்படுகின்றன. 'பழக்கவழக்கங்கள் லலிதமாயிருத்தல் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நிலை தேவையாய் இருக்கிறது' ( எக்ஸிஸ். ப. 15) என்று புதினத்தில் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். ஒரு மனிதன் தனது அன்றாடத் தூய்மை தொடர்பான செயல்களைக் கூட சரிவரசெய்யமுடியாத சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

**தொகுப்புரை**

பின்நவீனத்துவ புதினத்தில் காணப்படும் பாலியல், மொழி, செயல்பாடுகள், உணவு, தூய்மை ஆகியவற்றைச் சார்ந்த மற்றமைக்கூறுகள் விளிம்பநிலை மனிதர்களின் அவலங்களை நமக்கு எடுத்துரைக்கின்றன. மையம் மற்றும் விளிம்புநிலை இவற்றிற்கு இடையேயான வேறுபாட்டைத் தகர்த்து சமன்செய்கின்றது. இதன் மூலம் சமூகத்தில் உள்ள மையக்கட்டமைப்பையும் அதன் குறைபாடுகளையும் அறியமுடிகின்றது. குறைபாடுகளுக்கான தீர்வுகளை நோக்கி நகர்த்துகின்றது அல்லது கவனத்தில் கொள்ளச்செய்கின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. எம்.ஜி.சுரேஷ்., பின்நவீனத்துவம் என்றால் என்ன? ப. 9.
2. எம்.ஜி.சுரேஷ்., பின்நவீனத்துவம் என்றால் என்ன? ப. 107.
3. எம்.ஜி.சுரேஷ்,பின்நவீனத்துவம் என்றால் என்ன? ப. 169.
4. பிரேம்,பின்நவீனத்துவம் ப. 61.